## கூட்டுறவு மிகை நிதியம் - 2016

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியத்தில் ஆண்டிறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கூட்டுறவு மிகை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1

நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று ஒன்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7

ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தேறிய பெறுமதி சூனியம் என குறிப்பிட்டுள்ள ரூபா 1,840,569 கிரயத்தையுடைய கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் என்பன பயன்பாட்டில் இருந்து ஒதுக்குவதற்காக வைக்கப்பட்டவை என வகைப்படுத்தப்பட்டவையா என்பது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டளவில் பயன்படுத்தாமல் காணப்பட்ட ரூபா 189,001 கிரயத்தையுடைய கணனிகள், மென்பொருள்கள் ஐந்தொகையில் புலப்படாத சொத்துக்கள் எனக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கியிருந்த கடன் தொடர்பாக பிணையாக வைக்கப்பட்டிருந்த நிலையான வைப்புக்களை இரத்துச் செய்யும் போது 2014 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2014 மார்ச் 06 வரையான காலப்பகுதிக்கான வட்டி ரூபா 207,296 தொகை ஒன்று வங்கி நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிந்த போதிலும் அது தொடர்ந்தும் பெறவேண்டிய மீதியொன்றென 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவினக் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த கூட்டுறவு சங்க கடன் மீதியில் பேரேடு மற்றும் அட்டவணைகளை இணக்கஞ் செய்த போது ரூபா 86,618,052 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் அப்பெறுமதியிடையே ரூபா 163,663 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு ஐந்தொகையில் திறைசேரி உண்டியல்களில் முதலீட்டுப் பெறுமதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் அப்பெறுமதியிடையே ரூபா 131,104 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளில் திரண்ட நிதியத்திற்கான சீராக்கல் என ரூபா 6,257,342 தொகை பதிவு செய்திருந்த போதிலும் அந்த சீராக்கல்கள் எவை என விளக்கமளிக்கப்படவில்லை.

### 2.2.4 தொங்கல் கணக்கு

1997 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 9,475,735 இற்கான செலவு மீதியொன்று தொங்கல் கணக்கொன்றில் காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| i. | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கிய கடன் மற்றும் வட்டி | 579,288,575 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| ii. | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறவேண்டிய தொகை | 5,029,486 | |
| iii. | பொது வைப்புக் கணக்கு | 7,444,158 | பொதுவைப்புப் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணை |
| iv. | நிலையான வைப்பு பிணை கடன்கள் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல்கள் |
| v. | ஒழித்தல் கணக்கு | 2,620,473 | ஒழித்தல் கணக்கின் பிரதியொன்று |
| vi. | செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | மீதியை உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் |
| vii. | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 3,871,256 | |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி பிரதி செயலாளருக்கு செலுத்த வேண்டிய கடன்வட்டி ரூபா 81,871,370 தொகை மற்றும் மிகை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,017,550 தொகை என்பன 04 வருடங்களாகவும், கூட்டுத்தொகை ரூபா 1,020,235 இற்கான 05 செலுத்த வேண்டிய பொறுப்புக் கணக்குகள் 5 வருடங்களை விட மிகையான காலம் முதலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

(ஆ) வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு 1992 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை வழங்கியிருந்த ரூபா 157,221,330 இற்கான கடன் தொகையில் ரூபா 130,398,674 இற்கான கடன் மீதி மற்றும் அதனொடு தொடர்புடைய வட்டி ரூபா 51,898,908 தொடர்ந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. இவற்றில் 5 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 107,721,330 இற்கான கடன் தொகையில் கடன் தவணைப் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1992 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையில் காலப் பகுதியில் 9 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 284,119,496 இற்கான கடன் தொகையில் 2016 திசெம்பர் 31 வரை எதுவித பணமும் அறவிடப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய வட்டி ரூபா 41,383,507 ஆக இருந்தது.

(ஈ) கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு சொந்தமான காணியில் சிறப்பு பால் விற்பனவு நிலையம் ஒன்று நிர்மானிப்பதற்கு வ/ப இலங்கை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தில் 2007 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 18,249,750 இற்கான கடன் தொகையில் ரூபா 16,549,750 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் அச் சங்கம் தற்போது செயற்படாத நிலைமையில் காணப்பட்டதினால் கடனை அறவீடு செய்தல் நிச்சயமில்லாமல் காணப்பட்டது.

(உ) வ/ப நிக்கவெரட்டிய அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு நிர்மாணவேலை ஒப்பந்த வேலை ஒன்றினை நிறைவேற்றுவதற்காக 2014 ஜனவரி 17 திகதி ரூபா 4,000,000 இற்கான வட்டி இல்லாத கடன் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. நிர்மான வேலை ஒப்பந்த வேலை 03 மாதங்களில் பூர்த்தி செய்து கிடைக்கும் வருமானத்தில் இருந்து அல்லது கூட்டுறவு சங்கத்திற்கு சேகரமாகும் பணம் ஆகிய இரண்டில் ஆரம்பத்தில் கிடைக்கும் பணத்தினால் ஒரே தடவையில் கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதாக உடன்படிக்கையின் பிரகாரம் இணக்கத்தை வெளியிட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,000,000 இற்கான கடன் மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஊ) கொபெய்கனே கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் நவீனமயப்படுத்துவற்காக 2013 ஏப்ரல் 05 திகதி வழங்கியிருந்த ரூபா 10,000,000 இற்கான கடன் தொகை மற்றும் கூட்டுத்தொகை தொகை ரூபா 2,613,932 இற்கான வட்டி 2016 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2014 அக்தோபர் 10 திகதியில் அதே விடயத்திற்காக ரூபா 7,000,000 இற்கான கடன் 2014 திசெம்பர் முதல் ரூபா 150,000 இற்கான மாதாந்த தவணைப்பணம் அறவீடு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன் தொகை தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 3,600,000 தொகை அறவிடப்படவேண்டி இருந்த போதிலும் ரூபா 1,104,510 தொகை மாத்திரமே அறவிடப்படவேண்டியிருந்தது.

(எ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் தற்போது செயற்படாத சங்கங்கள் என இனங்காணப்பட்டிருந்த 12 கூட்டுறவு சங்கங்களுக்கு 1990 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கியிருந்த கடன் தொகைகளில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 22,354,358 இற்கான கடன் மீதியொன்று மற்றும் கூட்டுத்தொகை ரூபா 8,728,473 இற்கான வட்டித்தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஏ) வ/ப நொச்சியாகம, வ/ப ஹொரோபத்தான பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தை ஒழித்திருந்ததாக வெளிப்படுத்தியிருந்ததனால் இந்த இரண்டு சங்கங்களுக்கும் வழங்கியிருந்த கடன் தொகைகளில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 241,666 மற்றும் ரூபா 1,000,000 தொகைகளுக்கான கடன் மீதிகளை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டளவில் செயற்படாது காணப்பட்ட வ/ப பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கியிருந்த ரூபா 14,408,121 இற்கான கடன் தொகையொன்று 2008 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றுக்களில் பலவின கடன்பட்டோரின் கீழ் முன் கொண்டுவந்து காணப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் 2015 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைவு கணக்காய்வு அறிக்கைக்கு வழங்கியிருந்த பதிலில் ‘‘பாடசாலைகளுக்காக இலவசமாக பால் நிலையங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த இந்தப் பணத்தை திருப்பி அறவீடு செய்ய முடியாது எனவும் உதவித்தொகை என்பதனால் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும்’’ குறிப்பிட்டிருந்தார்.

(ஒ) 1999 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 1,716,566 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலை மீதியொன்று காணப்பட்டது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 188(2) | 2003 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 106,093 தொகைக்கான வைப்பு செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத 02 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின் பிரிவு 4.3 | கணக்கு ஆண்டு முடிவடைந்த 02 மாதங்களுக்கு மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையுடன் திரண்ட நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்று பொதுநிதி பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் காணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 3 நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 103,997,327 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 89,477,486 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 14,519,841 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. கூட்டுறவு சங்கங்களின் வட்டி வருமானம் ரூபா 6,534,263 இனால் குறைந்திருந்த போதிலும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி மற்றும் திறைசேரி உண்டியல் வட்டி முறையே ரூபா 17,931,767 இனால் மற்றும் ரூபா 4,005,058 இனால் அதிகரித்திருந்தல் மேற்கூறிய அதிகரிப்புக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டிற்கு ஒப்பாக, 2013 ஆண்டின் போது நிதி மிகை குறைவடைந்திருந்ததுடன் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை நிதி மிகை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது. நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வினை கவனத்தில் எடுத்த பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 90,258,873 தொகைக்கான பங்களிப்பு 2016 ஆண்டளவில் ரூபா 104,574,614 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1974 ஜனவரி 10 ஆந் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு விதிகளில் 44 ஆம் பிரிவின் பிரகாரம் ‘‘மிகை நிதியத்தின்’’ பணம் பின்வரும் விடயங்களுக்கு ஈடுபடுத்த முடியுமென காட்டப்பட்டிருந்தன.

(அ) ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப சங்கங்களின் பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் அல்லது பதிவாளரினால் விதிக்கப்படக்கூடிய வேறு ஏதும் முறையில் அல்லது அவ்வாறான சங்கம் ஒன்றிற்கு உதவி வழங்குதல்.

(ஆ) மிகையொன்று ஏற்பட்டிருந்த மாவட்டத்தில் அமைந்துள்ள ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கம் ஒன்றிற்கு ஏதேனும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக உதவி வளங்குதல்

(இ) ஒழிப்பாளர் ஒருவருக்கு எதிராக காணப்படும் சிவில் வழக்கொன்றில் அவரது விடுதலைக்காக செயற்படுவதற்காக அவருக்கு உதவி வழங்குதல்.

(ஈ) கூட்டுறவு சங்கச் சட்டத்தின் பிரிவு 3(1)(இ) மற்றும் (ஈ) இன் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு உதவி வழங்கும் விடயத்திற்காக நிறுவப்பட்டுள்ள வேறு நிறுவனம் ஒன்றிற்கு உதவி வழங்குதல்.

மேற்கூறிய விடயங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது உதவி நிதி ஏதும் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கியிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 106 கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 773,117,004 தொகையொன்று கடனாக வழங்கியிருந்த போதிலும் இது தொடர்பாக திணைக்களத்தினால் தொடர் செயல் நடவடிக்கை எடுத்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டமையால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 593,542,978 தொகை எனப்படும் வழங்கியிருந்த கடன் தொகையில் 77 சதவீதத் தொகையொன்று மற்றும் கூட்டுத்தொகை ரூபா 175,002,229 இற்கான வட்டி தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மனிதவள கூட்டுறவு சங்கத்தின் ஒழித்தல் விடயங்களுக்காக 2007 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை இடையிடையே நிருவாக செலவுகள் பிணக்கு தீர்ப்பதற்கான கட்டணம், சட்டச் செலவுகள், பிரயாணச் செலவு, விருந்தோம்பல், கூட்டங்கள், கணக்காய்வு விடயங்களுக்காக மற்றும் வைப்புக்களை விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 56,901,825 தொகைக்கான மீதியின் பிழையற்ற தன்மை தொடர்பாக மனிதவள கூட்டுறவு சங்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இந்த சங்கத்தின் ஒழித்தல் விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,244,081 தொகையினை குறிப்பிட்ட சங்கத்தில் இருந்து கிடைக்க வேண்டிய தொகை ஒன்றாக கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 3 மில்லியனை விட மிகையான மீதியொன்று ஒவ்வொரு மாதமும் காணப்பட்டதுடன் மிகைப் பணத்தை இனங்கண்டு அப்பணத்தை வட்டி வருமானம் ஒன்று கிடைக்கக் கூடிய விதமாக முதலீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள கூட்டுறவு சங்க விதி 44(iii) இன் பிரகாரம் கூட்டுறவு மிகை நிதியிலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு மாத்திரம் கடன் வழங்க முடியுமெனினும் அதற்கு முரணாக 2013 ஆண்டின் போது கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்திற்கு 16 சதவீத வட்டி வீதத்தில் 06 மாதாந்த தவணைகளில் செலுத்தி முடிக்கக் கூடிய விதமாக ரூபா 75,000,000 இற்கான கடன்தொகையொன்று வழங்கியிருந்தது கடன் தொகையை திருப்பி செலுத்தக்கூடிய சாத்தியக்கூறு தொடர்பாக கவனம் செலுத்தாமல் இந்த கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் ரூபா 62,091,327 இற்கான கடன்தொகை ஒன்று மற்றும் ரூபா 15,893,123 இற்கான வட்டித் தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்**

2006 திசெம்பர் 22 திகதி பீஎப் 423 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 4.3 பந்தியின் பிரகாரம் 2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் கூட்டுறவு மிகை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஆகஸ்ட் 28 திகதியே சமர்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் மற்றும் சங்கங்களின் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நாட்குறிப்புக்கள் தயாரித்திருக்காமை மற்றும் அங்கீகரித்திருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் பேணப்படாமை. |
| (இ) | கடன் கட்டுப்பாடு | (i) கூட்டுறவு சங்சங்களின் நிதி சாத்தியக்கூறினை பரிசோதனை செய்யாமை.<br>(ii) கடன் வழங்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, வழங்கியிருந்த கடன்கள் தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை மற்றும் கடன் அறவீடு செய்வதன் பலவீனங்கள் காணப்படல். |